கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 04.01.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அக்ரி பிட்ச்பெஸ்ட் 2.0

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் தாவர உயிர் தொழில்நுட்பத் துறையில் இயங்கி வரும் இ–யுவா (E –YUVA ) மையமும்,உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையமும் இணைந்து அக்ரி பிட்ச்பெஸ்ட் 2 .0 (Agri PitchFest 2.0 ) என்ற ஒரு நாள் போட்டியை ஜனவரி 3 ஆம் தேதி அன்று நடத்தின. இப்போட்டி வேளாண் பழ்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் முயற்சியில் நடத்தப்பட்டது.

இப்போட்டியின், முதல் சுற்றில்,50 மாணவ அணிகள் பங்கேற்று தங்களின் வேளாண் சம்பந்தப்பட்ட புதிய யோசனைகள் மற்றும் திட்டங்களை காட்சிப்படுத்தினர். அதில், 13 அணிகள் அடுத்த சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். மூன்று சிறந்த யோசனைகளுக்கு பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. முதல் பரிசு கோவை வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும், இரண்டாம் பரிசு கோவை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும், மூன்றாம் பரிசு திருவண்ணாமலை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குனர் முனைவர் ப. பாலசுப்ரமணியம் அவர்கள் வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் துவக்கவிழாவில், தாவர உயிர் தொழில்நுட்ப துறையின் தலைவர், முனைவர் ஈ. கோகிலாதேவி அவர்கள், வரவேற்புரை ஆற்றினார்.தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில் அவர்கள், தலைமையுரை ஆற்றினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையின் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் வெ. பாலசுப்பிரமணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களை தொழில்முனைவோராக ஊக்கப்படுத்தினார். கோவையை சேர்ந்த சில தொழிமுனைவோர் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**